**New Science Academy**
நல்லூர்
PAPPER CLASS
PHYSiCS
By Mr. சோதிலிங்கம்
ஆரம்பம் 1?- 06 - 90
திங்கள்
மாலை 4 மணி



பக்கங்கள் எட்டு    விலை ரூபா:- 3-00


# முரசொலி


முரசு 04 ஒலி 123 வெள்ளி 08-06-1990 (வைகாசி 25) துல்ஹஜ்ஜா 14



**New Science Academy**
B.M.C. முன்பாக
யாழ்ப்பாணம்
DAY CLASS
PHYSICS
SOUND
BY MR. மணியம்
திங்கள் முதல் வெள்ளி
வரை 11.30 மணிக்கு


### 3 ட்ரக்குகள் 3 கனரக வாகனங்கள் 2 அமானுஷ்ய டாங்கிகள் சகிதம்

★ அனுமதி பெறாத புறப்பாடு ★ புலிகளின் காவல் அரண் தகர்ப்பு

★ அத்துமீறிய ராணுவம் புலிகள் படையணிகளால் சுற்றிவளைப்பு

# வவுனியாவில் துப்பாக்கிச் சமர்

# கோப்ரல் பலி; 10 பேர் படுகாயம்

## புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் இல்லையென அறிவிப்பு

நேற்றுக்காலை8.30மணியளவில்வவுனியாவில்உள்ளதாண்டிக்குளத்தில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு இராணுவ வீரர் கொல்லப் பட்டார், பத்து இராணுவ வீரர்கள் படுகாயமடைந்து ஹெலிகொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர்.

இந்தப் பத்துப்பேரில்ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம் மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித உயிர்ச்சேதமோ காயமோ ஏற்படவில்லை என புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அத்து மீறிய இச்செயல் குறித்து விடுதலைப்புலிகள் நீதியமைச்சர் ஜனாப் ஏ.ஸி. எஸ்.ஹமீத், பாதுகாப்புப் படைச் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்க ஆகியோருடன் விரைந்து தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்தே நிலைமை கட்டுக்கடங்கியது எனத்தெரிவிக்கப்படுகின்றது.

### யுத்த நிறுத்த முதல் முறிவு

ஒரு வருட காலமாக நீடித்து வந்த யுத்த நிறுத்த நிலையை முதல் தடவையாகப் பாதித்துள்ள பெரும் மோதல் சம்பவம் இது என வர்ணிக்கப்படுகின்றது.

பெரும் பரபரப்பை உண்டு

— 8 ஆம் பக்கம் பார்க்க

## மலையகத் தொழிலாளர்

## உழைத்த மண்ணில் உயிர் துறக்கவே விருப்பு

''இலங்கையின் அபிவிருத்திக்குத் தம்மை அர்ப்பணித்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் எந்த நாட்டிற்காக உழைத்தார்களோ அதே மண்ணில் இறப்பதையே விரும்புகின்றனர்''

இவ்வாறு தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டிகளின் அமைப்பாளரான திரு எஸ். நடேசன் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற

—8ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத கசிப்பு, கள்

## புங்குடுதீவில் திடீர் முற்றுகை நடவடிக்கை

புங்குடுதீவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் என்றுமில்லாத வாறு அதிகரித்து வரும் சட்டவிரோத கசிப்பு, கள், விற்பனை, உற்பத்தி போன்ற வேலைகளில்ஈடுபட்டிருந்தவர்களின் வீடுகளுக்கு திடீர் சோதனை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

வேலணை தெங்கு பனம் பொருள் விற்பனை கூட்டுறவுச்சங்க ஊழியரும், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் குழுவொன்றும் திரு கு. இராமச்சந்திரன் தலைமையில்

—8ஆம் பக்கம் பார்க்க

# வட, கிழக்கு மாகாண தேர்தலுக்கு சார்க் நாட்டு பார்வையாளர்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பு குழு அழைக்கப்படும் என பாதுகாப்பு இணைய மைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தக்கண்காணிப்பு குழுவில் சார்க்நாடுகளைச்சேர்ந்த அரச மற்றும் தனிப்பட்ட பார்வையாளர்கள் இடம்பெறலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பு குழு தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கலாம் என விடுதலைப் புலிகளும் வலியுறுத்தி வருவது தெரிந்ததே.

## மன்னார் பாதை திருத்தம் புலிகளும் உதவத் தயார்

### லஷ்மணன்

மன்னார் பகுதி முக்கிய பாதைகள் யாவும் மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இவைகளை புனரமைப்பதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் ''என்று மன்னார் தீவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு.லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முயற்சி செய்யும் போது தமது ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் மன்னார் கச்சேரியில் நடைபெற்ற அரச உயர் அலுவலர்களுக்கான கருத்தரங்கில் பேசுகையில் அவர் கூறினார்

(11)

## மருத்துவமனை சென்று

## வீடு திரும்புகையில் பெண் விபத்தில் சிக்கி படுகாயம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் மருந்து வாங்கிவிட்டு வீடு செல்வதற்கு மினி பஸ்ஸில் பயணம் செய்த குடும்பப் பெண்மணி ஒருவர் விபத்துக்குள்ளானார்.

பஸ்தரிப்பு நிலையத்தில் இறங்கி பஸ்ஸின் பின்பக்கமாக வீதியைக் கடக்க முற்பட்டபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு தலையிலும், முகத்திலும் பலத்த காயங்களுடன்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## இம்மாத ஓய்வூதியத்தை இன்று பெற்றுக்கொள்ளலாம்

யூன் மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஓய்வூதியகாரர் இன்று முதல் தத்தமது வங்கிகளில் பெறக் கூடியதாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் தினம் 14 ம் திகதி எனக் குறிக்கப்பட்டுள்ள போதிலும் யாழ் செயலக

—8 ஆம் பக்கம் பார்க்க

## இவர்களை புறக்கணிப்பதுஏனோ

வடகிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த காப்புறுக்கூட்டுத் தாபன அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு இன்னமும் கஷ்ட நிவாரணக்கொடுப்பனவுப் பணம் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது

ஏனைய திணைக்கள இலாகாவிற்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (11-ஸ்ரீ)

## 14ம் 'இத்தாலியா 90,

## உலக கிண்ண உதைப்பந்தாட்டம் ரூபவாஹினியிலும் ஒளிபரப்பாகும்

14ஆம் உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று இத்தாலியில் ஆரம்பமாகின்றது. போட்டிகள் ஜூலை 8ம் திகதி வரை நீடிக்கும்.

14ஆம் உலகக் கிண்ண போட்டியில் இருபத்தியிரண்டு நாடுகள் பங்கு பற்ற தகுதி பெற்றுள்ளன. முதல்தடவையாக இம்முறை அமெரிக்காவும் போட்டியில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது பங்கு பற்றும் அணிகளில் இத்தாலியும் தற்போதைய உலக சம்பியனான பிரேஸிலும் பலம் வாய்ந்த அணிகளாக கருதப்படுகிறது.

உலக கிண்ண உதைப்பப் போட்டியின் கால் இறுதி ஆட்டம் முதல் ரூபவாஹினி நேரடி ஒளிபரப்புச் செய்ய ஏற்பாடுகளைச் செய்துள்ளது

## கிளிநொச்சியில்

## மின்தடை தொடர்வதால் பல்வேறு பாதிப்புகள்

கிளிநொச்சி நகரில் கடந்த இருவாரங்களாக மின்சாரத் தடை ஏற்பட்டு வருவதால் வேலைகள் ஸ்தம்பிதமடைந்து வருகின்றன.

மின்தடையால் அரச அலுவலகங்களிலும் தனியார் பொதுஸ்தாபனங்களிலும் அலுவலகவேலைகள் தொடக்கம் பல வேலைகள் தடைப்பட்டு வருவதால் பொது மக்

—8ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

கல்வி

A/L. Accountancy ''கம்பனிக்கணக்குகள்'' ஆசிரியர் க. தங்கராஜா B.SC. P. F. T.S.P.DIP IN.ED. கிடைக்குமிடம்:- யாழ் நகர் புத்தக சாலைகள் தொகையாக வாங்குவோர்க்கு விசேட கழிவு உண்டு. 06027


# மட்டுதிருமலை இணைப்புசேவை திடீர் இடை நிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, திருமலை இணைப்பு ரயில் பெட்டி கடந்த புதன்கிழமை தொடக்கம் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டுள்ளது.

பல பிரயாணிகளின் நீண்ட நாட் கோரிக்கையையடுத்து கடந்த மாதம் 13-ந் திகதி தொடக்கம் மேற்படி மட்டக்களப்பு - திருகோணமலை இணைப்புரயில்சேவை நடாத்தப்பட்டு வந்தது.

இச்சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பல பிரயாணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர். (5)

# வடமராட்சி பாடசாலை தோறும் கலை ஆங்கில போட்டி அவசியம்

கல்வியை முன்னேற்ற வேண்டும் என்ற காரணத்தினாலேயே இப்பகுதிக்கு நான் அடிக்கடி வருகை தருகின்றேன். இவ்வாறு அண்மையில் பருத்திதுறைக்கு வருகை தந்த வடமராட்சி கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன் குறிப்பிட்டார்.

பருத்திதுறை கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் ஒவ்வொரு பாடசாலையிலும் கலை நிகழ்ச்சிகள் ஆங்கிலப் போட்டிகள் என்பன நடாத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் இப்பகுதிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்கள் போன்ற விபரங்களையும் பெற்றுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (43-கி)

# பாடசாலை மாணவரிடையே நாற்றுமேடை உற்பத்திப்போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட வனவள அபிவிருத்தி திணைக்களம் மரநடுகையை ஊக்குவிக்குமுகமாக மாவட்ட ரீதியில் பாடசாலை மாணவரிடையே நாற்றுமேடை உற்பத்திப் போட்டி ஒன்றினை நடாத்தியுள்ளது.

இப்போட்டியில் செட்டிபாளையம் மகாவித்தியாலயமும் வாளைச்சேனை மகாவித்தியாலயமும் சிறந்த நாற்றுமேடைகளை அமைத்து போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

இந்நாற்று மேடையில் பழமரக்கன்றுகளே பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக வனவள அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 51

# கலை மணி ஆண்டு விழா

(நாயன்மார்கட்டு)

கட்டப் பிராய் கலை மணி சனசமூக நிலையத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழா 23 ந் திகதி நிலைய முன்றலில் நடை பெறவிருக்கிறது.

விழாவையொட்டி 9 ந்திகதி காலை 8 மணிக்கு ஆறுபோ கொண்ட கிரிக்கட் போட்டியும், அன்றுபிற்பகல் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் 16 ம் 17 ம் திகதிகளில் இல்ல விளையாட்டுப் போட்டியும் 23 ந் திகதி காலை6 மணிக்கு 15 மைல் சயிக்கிள் ஓட்டப் போட்டியும் 9 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இறுதி நாளன்று நடைபெறும் அன்றைய தினம் இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (33 கி)

# அமைச்சர் ரஞ்சன் வெளியிடும் 'சட்டன பெரமுன பத்திரிகை'

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்,பெருதோட்டத் துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன 'சட்டன பெரமுன' (போராட்ட முன்னணி) என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இப்பத்திரிகையின் ஆசிரியராகவும், நிருபராகவும் இவரே செயற்படுகின்றார். இப்பத்திரிகைக்கு எவரும் வெளியில் இருந்து எழுத முடியாதெனத்தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஆங்கிலம், சிங்களம் மொழியில் வெளியாகும் இதன் ஒரு பிரதி பத்திரிகையாளரிடம் காண்பிக்கப்பட்டது,

தட்டச்சில் அடிக்கப்பட்டு போட்டோஸ்ரட் பிரதிகளாக வெளிவந்த இப் பத்திரிகையில் ஜே. வி. பி. சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களும், கடந்த வாரம் நிருபர்கள் மாநாட்டில் என்னை ஆத்திரப்படுத்தும் வகையில் கேள்வி கேட்டால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைக்கு அனுப்பிவைக்கப்படுவார் என அவர் விடுத்த எச்சரிக்கைகளைக் கண்டித்து பிரபல ஆங்கிலத் தினசரி ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந்ததற்குப் பதில்களும் இடம்பெற்றிருந்தன. (7கி)

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இருபாலையைச் சேர்ந்த உமாகாந்தன் (20) புங்குடுதீவில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

# சித்திர ஆசிரியருக்கு சேவைக்காலப் பயிற்சி

சித்திர ஆசிரியர்களுக்கான 3 நாள் செயலமர்வுச் சேவைக் காலப் பயிற்சியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் இ. சிவானந்தம் ஆரம்பித்து வைத்தார்.

சுமார் அறுபது ஆசிரியர்கள் பங்குபற்றும் இப்பயிற்சிக்கு என். எஸ். காந்தசாமி பொறுப்பாக இருநது நடத்துகிறர். முதல்நாள் சேவைக் காலப பயிற்சியை பிரபல ஓவியரும் கொக்குவில் இந்துக் கல்லூரி சித்திர ஆசிரியருமான ஏ. மாக் நடாத்தினார். (73. கி)

## 'முரசொலி' அனுசரனையுடன்

# வடக்கு கிழக்கு மாகாண 40 ஓவர் கிரிக்கட் போட்டி

வடக்கு கிழக்கு மாகாண கிரிக்கட் போட்டியின் (1990 மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் முரசொலி பத்திரிகையில் அனுசரனையுடன் நடாத்தபடவுள்ளது.

40 ஓவர்களைக் கொண்டதாக இப போட்டி. நடத்தப்படும் கழ்கங்கள் பாடசாலைகள் என்பன இப் போட்டியில் பங்குபற்றலாம்.

போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களிலிருந்து வடக்கு கிழக்கு பாடசாலை சிறந்த வீரரும் வடக்குகிழக்கு கழக சிறந்த வீரரும் தெரிவு செய்யும் போட்டியும் இடம் பெறும்.

போட்டிகள் அனைத்தும் நேர்க்கவுட் முறையில் இலங்கை கிரிக்கட்கட்டுப்பாட்டுச் சபையின் மட்டுப்படுத் தப்பட்ட ஓவர்கள் சட்ட திட்டங்களுக்கு அமைய யாழ் மத்தியஸ்தர் சங்க நடுவர்களின் உதவியுடன் நடாத்தப்படும்.

வெற்றிபெறும் கழக பாடசாலை அணிகளுக்கு மாகாண வெற்றி கிண்ணத்துடன் பெறுமதிமிக்க உபகரணங்களும் வழங்கப்படும் பங்கு கொள்ளும் அணிகளுக்கும் நிலைகேற்ப உபகரணங்கள் வழங்கப்படும்.

கழகங்களுககிடையிலான போட்டிகள் முதலிலும் அதனைத் தொடர்ந்து கல்லூரிகளுக்கிடையிலான் போட்டிகளும் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் பாடசாலைகள் என்பன இம் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை செயலாளர் வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறைச் அமைச்சு திருகோணமலை என்றமுகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கழகங்கள் 100 ரூபாவும் பாடசாலைகள் 50 ரூபாவும் அனுமதிக்கட்டணமாக காசுக் கட்டளைகள் மூலம் செலுத்துதல் வேண்டும்.

இதற்கான மாதிரிவிண்ணப் பப்படிபம் நாளை முரசொலியில் பிரசுரிக்கப்படும். (கி)

# மோட்டார் சைக்கிள் சதிசெய்தது

மீசாலைதெற்கைச் சேர்ந்த க. பரமேஸ்வரி (54) என்பவர் நேற்று மோட்டார் சைக்கிலிலிருந்து விழுந்து காயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (75கி)


## அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே. கே. எஸ், வீதி
யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள். புதுமனைப்புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள் அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள், பிறந்த தின, மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள். இறக்குமதிசெய்யப்பட்ட காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள், மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகலவிதமான கடதாசிவகைகள், மட்டைவகைகள், அன்பளிப்புப் பொருள்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

06246

## புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

Spoken English
with
Grammer by Britto

புதிய பிரிவு ஆரம்பம்
09-06-1990 (12 மணி)

96243

## திருமலையில் முரசொலி

முக்கிய செய்திகளை முந்தித் தரும் முரசொலியை திருமலை வாசகர்கள் முரசொலியின் திருமலை முகவரான

ஏ. எஸ். சபாநாதன்

சுசி புக்கிங் சென்ரர்
217, பிரதான வீதி,
திருமலை

என்னும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் முரசொலி விற்கப்படும் இடங்கள் வருமாறு:

றிங்கோ புத்தகசாலை
27, பிரதான வீதி,
திருகோணமலை.

ஸ்ரீ சதாஸ்
60, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை.

சூசை கடை,
12, கிறீன் வீதி,
திருகோணமலை.

ஆனந்தா ஸ்ரோர்ஸ்
155, பிரதான வீதி,
திருகோணமலை.

ஜானி சென்ரர்
392, மின்சார வீதி,
திருகோணமலை.

றஞ்சனாஸ் ஸ்ரோர்ஸ்
84, பாத்திமா வீதி,
திருகோணமலை.

சாந்தினி ஸ்ரோர்ஸ்,
99, திருஞான சம்பந்தர் வீதி,
திருகோணமலை.

உமையாள் கபே
332, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

அம்பாள் கபே
79, தபாலக வீதி,
திருகோணமலை.

நியூ நவதானிய ஸ்ரோர்ஸ்
60, சிவன் வீதி,
திருகோணமலை.

கிருஷ்ண விலாஸ்
183, மத்திய வீதி.
திருகோணமலை.

நியூ ஹோட்டல் எவரஸ்ட்
380, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

ஸ்ரீ பத்மா ஸ்ரோர்ஸ்
207, மத்திய வீதி,
திருகோணமலை.

காதிரியா கூல்பார்
429, டொக்யாட் வீதி,
திருகோணமலை.

சிவயோக ஸ்ரோர்ஸ்
209, மத்திய வீதி,
திருகோணமலை.

R. S. அப்துல் றபீக்
470, டொக்யாட் வீதி,
திருகோணமலை.

நியூ யாழ். கபே
51/A பிரதான வீதி, திருகோணமலை.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

## கல்வி முறையிலும் மாற்றம் வேண்டும்

எந்தவொரு நாட்டினது பொருளாதாரப் பிரச்சினையும் அந்த நாட்டினது மூலவளத்திலும், மனித வளத்திலுமே தங்கியுள்ளது.

எமது பிரதேசங்களை நோக்குகையில் மூல வளம் இருந்தும் மனித வளம் இன்றிப் பொருளாதாரப் பிரச்சினைகள் மோசமாகத் தலைதூக்கியுள்ளது

கடல்வளம், நீர்வளம், நிலவளம், கனிப் பொருள்வளம் வனவளம் போன்ற பல வளங்கள் எமது பகுதியில் போதியளவு உள்ளன. ஆனால் மனித வளம் இன்மையால் இவை பயன்படுத்தப்படாது உச்ச பயன்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்படாதுள்ளன.

மனித வளம் மேம்படாததற்குத் தொழில் பற்றிய அறிவுப் பற்றாக்குறை, தொழில் செயன் முறை அறிவுப் பற்றாக்குறை, இளம் சந்ததியினரின் தவறான போக்கு, சுய சிந்தனை இன்றி தோன்றிய வெளிநாட்டு மோகம் ஆகிய காரணங்களை முன்வைக்கலாம்.

எந்த ஒரு காரணத்திற்காகவும் மனித வளப் பற்றாக்குறைக்கு கடந்தகால வன்செயல்களை மட்டும் காரணம் காட்டுவது முழுமையான தவறாகும்.

ஏனெனில் இன்று எமது பகுதிகளில் எத்தனையோ ஆயிரம்பேர் வேலை இன்றி அலைவதைத் தான் அன்றாடம் காண்கின்றோம். இவர்களிடம் மனித வளம் உண்டு. முயற்சியில்லை.. துணிவு இல்லை.

தற்போது உள்ள வளங்களில் 25 சதவீதமான வளங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மிகுதி 75 சத வீத வளங்கள் வீணாக பாழடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பாழடிப்பில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. இந்தப் பாழடிப்பைத் தடுக்க யாவரும் முயற்சிக்கின்றார்கள். ஆனால் அவை பேச்சில் மட்டுமே.

ஒவ்வொருவரினதும் தனியான, தனித்துவமான ஆற்றல்களை வளர்க்க வேண்டும். அந்தத் திறமையைக் கண்டு பிடிப்பது பெற்றோர்களாக இருக்கலாம், ஆசிரியர்களாக இருக்கலாம், நண்பர்களாகவும் இருக்கலாம்.

இன்று மனித வளம் பயன்படுததப்படாதுள்ளதற்குக் கல்வித்துறையில் ஆராய்ந்தால் தற்போதய பொதுக் கல்விப் பாடத் திட்டங்களும், உயர்தரக் கல்விப் பாடத் திட்டங்களும், பல்கலைக்கழகக் கல்வித் திட்டங்களும் சரியான பங்களிப்பை வழங்க வில்லை என்ற காரணமே முடிவாகின்றது.

கல்வித் திட்டங்களைத் தயாரிப்பவர்கள், அதை நடைமுறைப்படுத்துபவர்கள் எதற்காகக் கல்வி அறிவை ஊட்டுகின்றார்கள் என்பது புரியவில்லை.

மனித வளத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் கல்வித் திட்டங்கள் அமையவில்லை. மாறாகப் பரீட்சை ஒன்றையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆயிரக்கணக்கான வேலையில்லாத இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வாழ்வழிக்கக் கூடியவகையில் கல்வித் திட்டங்களை அமைத்துச் செயற்படுந்த முனைவது அவசியமாகும்.

## இதயநாதம்

வெள்ளிக்கிழமை 08-06-1990

நல்வாக்கு

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது,

—ஜான்சன்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

பனையைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளுங்கள்

# பயன் பல நல்கும் கற்பகத்தரு பனை மரத்தாவரம்

# பொருளியல் உலகில் அதன் பூரண முக்கியத்துவம்

பனை மரமானது மிக ஆதியான தாவரக் குடும்பமாகிய பாமே [Palmae] குடும்பத்தைச் சேர்ந்தது. இக்குடும்பமானது ஏனைய பூக்கும் தாவரங்களிலும் பார்க்க பழமையானது. 120 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பாமே குடும்பத்தின் தாவர சுவடுகள் பதியப்பட்டுள்ளன. பல மில்லியன் வருடங்களாக நடைபெற்ற இயற்கைத் தேர்வின் விளைவாகவே இன்றைய பனை மரத்தின் உருவம், அமைப்பு ஆகியனவும், அதனால் விளைந்த தற்போதைய வாழிடத்திற்கான மிக உன்னதமான இசைவாக்கமும் பெறப்பட்டுள்ளன.

இதையே அதன் ஆதியான வம்சபரம்பரை (Ancestry) விளக்குகிறது. இவ்வியற்கை இசைவாக்கம் பனைமரம் போன்றவற்றில் விசேஷமாக உள்ளது. ஏனெனில் இங்கு நடைபெறும் தேர்வில் மனிதனின் நேரடியான தலையீடு மிகக் குறைந்த அளவிலேயே இருந்துள்ளது. இந்த இயற்கைத் தேர்வு முறையின்விளைவாக இவ்வினங்கள் தமது வளர்ச்சிக்கும், உயிர் வாழ்விற்கும் மனித முயற்சிகளில் மிகக் குறைந்தளவிலேயே தங்கி இருக்கின்றன.

விவசாய உற்பத்திகளை பெறுவதற்கான சக்திச்செலவுகளைப் பற்றி அதிக கவனம் செலுத்தும் இக்காலகட்டத்தில் பனம்பொருட்களின் உற்பத்திச்செலவு சக்திச்செலவு விகிதமானது (energy input/output ratio). தெற்கில் பசுமைப்புரட்சிக்கு வழிகோலிய அதிசய இனங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் வடக்கில் விவசாய உற்பத்திப் பொருள்களின் சக்திச் செலவோடு ஒப்பிடும்போதும் மிக்க்குறைவாயுள்ளது. உதாரணமாக 2. 1G J அனுசேப சக்தியை கொண்ட அமெரிக்க அப்பிள்களை உற்பத்தி செய்வதற்கு 5. 3 GJ எரிபொருட்சக்தி செலவாகிறது என அளவிடப்பட்டுள்ளது.

பனை மரத்தின் அமைப்பு ரீதியான சிறப்பியல்புகள் ஏனைய ஒருவித்திலைத் தாவரங்களுடன் அதனைத் தொடர்புபடுத்துவதைக் கடினமாக்குகிறது.

மக்குறா (McCurrah) (1960) 'palms the world' என்னும் நூலில் 4000 இனங்களை உள்ளடக்கும் 200 சாதிகளை வேறு படுத்துகிறார். எனினும் பேர்ஸ்கிளவ் pursglove (1975) இன் ஒருவித்திலைத்தாவரங்கள் பற்றிய நூல் பாமே குடும்பத்திலுள்ள 9 உப குடும்பங்களில் அடங்கியுள்ள 225 சாதிகளின் ஏறக்குறைய 2600 இனங்கள் மட்டும் குறிப்பிட்டுள்ளன.

இக்குடும்பத்தைச் சேர்ந்த தாவரங்கள் பாகுபாட்டு ரீதியாக நன்கு அறியப்படவில்லை. இவைபற்றிய மேலதிக பாகுபாடு, உருவவியல் ரீதியான ஆராய்ச்சி தேவை. (Lawrence, 1951.)

பனைமரமானது 6 சாதிகளையும் 30 இனங்களையும் உள்ளடக்கியுள்ள உப குடும்பமாகிய Boras soideae ஐச் சேர்ந்தது. (Pursglove, 1975.)

பனைமரம் Borassus எனும் சாதிக்கு உரித்தானது. அங்கையுருவான விசிறி போன்ற இலைகள், ஆண், பெண் பூக்கள் தனித்தனியான மரங்களில் உருவாகுதல், (ஈரில்ல இயல்பு) ஆகியன இந்தச் சாதியைச் சேர்ந்த தாவரங்களின் வேறுபடுத்தக்கூடிய இயல்புகளாகும். மக்குறா (Mclcurrah) பொறாசஸ் (Borassus) சாதியின் கீழ் 7 இனங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவை யாவன:

1. இந்திய மலாய இனங்கள்-Borassus flabellifer.
2. ஆபிரிக்க இனங்கள்-Borassus aethiopicum.
3. சூடான்-Borassus deleg.
நியூகினி-Borassus heiniana.
5. மடகஸ்கார் - Boraussus Madagascariensis
6. மடகஸ்கார்- Borassus sambirancnsis
7. மலாயா-Borassus machaddenis

B. flabellifer, B. aethiopicum ஆகிய இனங்கள் ஆசியா, ஆபிரிக்கா ஆகிய இரு வேறுபட்ட கண்டங்களில் பரவியிருந்தபோதும் அவை பல நெருங்கிய ஒத்த இயல்புகளைக் காட்டுகின்றன. ஏனைய இனங்களின் அடிப்படை உருவவியல் பற்றிய விபரம் இல்லை என்றே கூறலாம்.

பனைமரமானது Borassus flabellifer) இனத்தைச் சேர்ந்தது. இது அயனமண்டல ஆசியா, மலேசியாவின் வறண்ட பகுதிகள் முழுவதும் காணப்படுவதுடன் குறிப்பாக இந்தியாவில் ஏராளமாகக் காணப்படுகிறது. உலகில் தென்னை மரத்திற்கு அடுத்ததாக மிக அதிகமாகக் காணப்படுவது பனைமரமென நம்பப்படுகிறது,

பனையைச் சார்ந்த மரங்கள் (Palms) பொதுவாக அயனவண்டலத்தில் பரப்பியுள்ளன. எனினும் சில தாழ் அயன மண்டலப்பகுதி, இளவெப்ப குளிர்வலயப் பகுதிகளிலும் பரவியுள்ளன. இலங்கையில் பனை மரமானது தென்னை மரத்திற்கு முன்பாகவே பரந்து காணப்பட்டது. பாம் (palm) ஆனது அமில மண்ணையும், ஈர வலயத்தின் மூகில் கூடிய மந்தார சுவாத்தியத்தையும் விரும்புவதில்லை என்பதை இலங்கையில் அதன பரம்பல் விகிதம் காட்டுகிறது.

ஒருவேளை பூப்பதற்கு (இனவிருத்திக்கு) பகலில் குறிப்பிட்ட அளவு பிரகாசமான சூரியஔி அவசியமாக இருக்கலாம். ஏனைய மரப்பயிர்களுக்கு உகந்ததல்லாத வறண்ட வளம் குறைந்த மண்ணிலும் பனைமரமானது உயிர் வாழ்வதற்குச் சிறந்த முறையில் இசைவாக்கம் அடைந்துள்ளது. அத்துடன் அதன் தற்போதைய பரம்பல் இக்காரணியாலேயே பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

மனிதனின் உபயோகத்தைப் பொறுத்த வரையில் பாமே குடும்பமானது கிராமினே (தானியங்கள், புற்கள் ஆகியன) யிற்கு அடுத்தாகும். மனிதனது அடிப்படைத் தேவைகளாகிய உணவு நார் எரிபொருள் ஆகியவற்றை வழங்கும் அதன் ஆற்றல் அதிவெப்பவலய வாழ் மக்களுக்கு நன்கு தெரிந்ததாகும்.

இருப்பினும்மனிதன் உணவு உடை (நார்) போன்ற தனது குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கரகப்பல ஆண்டுகளுக்குமேலாகச்சிறந்த பல்வகைத் தாவர இனங்களைத் தேர்ந்தெடுத்துள்ளான் அத்துடன் தனது தேவைக்காக அதிகூடிய அறுவடை உடைய தாவரங்களாக அவற்றைத் தேர்ந்து வளர்த்துள்ளான்.

இந்தப் பிரிவைச் சேர்ந்த தாவரங்கள் கடந்த ஐம்பது வருட தாவர ஆராய்ச்சியினால் மிக அதிகமாக நன்மையளித்துள்ளன. பாம்கள் மேல்நாட்டு விஞ்ஞானிகளால் கவனிக்கப்படாத ஒரு தாவரரக் கூட்டம் அத்துடன் பாம்கள் இவ்விஞ்ஞானிகள் வாழ்ந்த குளிர்வலய நாடுகளில் தவர ஆராய்ச்சி மையங்களுக்கு அப்பால் வளர்வன.

மேலும் அவற்றின் பெரிய பரிமாணம்கண்ணாடித்தாதர கூடங்களில் (green house) வளர்க்சப்பட தடையாக இருந்தது. இதைவிட மந்தமான வளர்ச்சி நீண்ட இயல்பு அது வளரும் அபிவிருத்தியடைந்துவரும்நாடுகளிளிள்ள நிதிக்குறைவு, அங்குள்ள பயிற்றப்பட்ட விஞ்ஞானிகள் பற்றாக்குறை ஆகியன அவற்றின் மறைந்துள்ள விசேட இயம்புகளை இதுவரை உணர முடியாமல் தடுக்கினறன.

பனைமர வகையைச் சேர்ந்த பாம்களின் வளர்ச்சியானது அதன் உச்சியிலுள்ள தனியான வளர்ச்சி அரும்பிலிருந்து ஆரம்ப

ஓலை (உலர்நிறை) — 6, 500 kg /ha /yr
பதநீர் (பனங்கட்டி நிறையில்)— 300,100 kg/ ha /yr
பழக்களி (வெல்லம் + மாப் பொருள்) — 1, 500 kg / ha/ yr
'கிழங்கு' (வெல்லம் + மாப் பொருள்) —1,000kg /ha /yr

அட்டவணை இல் தரப்பட்டுள்ள பனையின் விளைவுப் பொருட்கள் நிச்சயமாக பனை சார்ந்த முதலீட்டுக்கு உற்சாகமூட்டக் கூடியவை. இப் பெறுபேறுகள் பரிசோதனை ரீதியாக உறுதிப்படுத்தப்படுவது பனை மரத்தில் முதலீடு செய்வதால் வரக் கூடிய பயன்களை ஆதாரப் படுத்துவதற்குப் பிரயோசனமாக இருக்கும். மேலும் பரந்த அளவில் பதநீர் பெறப் படும் பனங்கூடல்களில் மேற் கூறிய விளைச்சல் எட்டாவிடின் கட்டுப்படுத்தும் காரணிகளை அறிந்து நிவர்த்தி செய்யவும் உதவும்.

இலங்கையில் வளரும் பனை மரங்கள், பரந்த முறையில் அவற்றின் பழத்தோலின் நிற அடிப்படையில் இரு வேறுபட்ட இனங்களாகப் பிரிக்கப்படக்கூடியன.

ஒருவகை இனம், குறைந்த சிவப்பு நிறப்பொருளைக் கொண்ட கறுப்பு நிறத் தோலுடைய பழங்களைக் கொண்டது. மற்றைய வகை இனம் தாராளமாகப் பரந்துள்ள சிவப்பு நிறப் பொருளுடன் மாறுபட்ட அளவில் கறுப்பு நிறப்பொருளையும் கொண்ட செந்நிறத் தோலுடைய பழங்களைக் கொண்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் தாவரவியற்றுறை மேற்கொண்ட ஒரு ஆராய்ச்சியில் யாழ்ப்பாணத்தில் உள்ள இரு வகைப்பனை இனங்களின் பழங்கள் ஒப்பிடப்பட்டன. (Kandiah and Rethithevy Sanmuganathan 1981) காபோவைதரேற்றுக்கள், புரதங்கள் கொழுப்புக்கள், அல்கலோயிட்டுக்கள், சுயாதீன அமினோ அமிலங்கள், கனிப் பொருள் அளவு ஆகியன ஒப்பிடப்பட்டன.

செந்நிறத் தோல்வகை இனத்தில் பழ எண்ணிக்கை கருநிற இனத்திலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாயிருந்தது. ஆனால் பழக்களி கரும்பழத்தில்கூட இருந்தது. கறுப்புத் தோலுடைய பழக்களியைப் பிரித்தெடுப்பதும் இலகுவாயிருந்தது. பழ எண்ணிக்கை வேறுபட்டதால் இருவகை இனங்களிலும் ஒரு மரத்திற்கான விளைவு அவ்வளவாக வேறுபடவில்லை.

இருவகை இனங்களிலும் பழக்களியானது வெல்லங்கள் மாப்பொருள் புரதங்களாகியவற்றை முறையே 77 வீதம் 10 வீதம் 2.5 வீதம் கொண்டிருக்கின்றன. செந்நிறத் தோல்வகை இனமானது அல்கலோயிட்டுக்கள், கனிப் பொருள் சுயாதீன அமினோ அமிலங்கள் ஆகியவற்றைக்கூடிய அளவில் பழக்களியில் கொண்டிருந்தது.

கறுப்புத்தோல் பழவித்துக்கள் முளைத்தலின்போது வித்தகவிழையம் கூடுதலாகப் பாவிக்கப்பட்டுக் காணப்பட்டது. எவ்வாறாயினும்முளைத்தலின்போது மேலதிக வித்தகவிழையம் பயன் படுத்தப்படுவதை கிழங்கின் நிறை பிரதிபலிக்கவில்லை.

கறுப்பு இன வகையானது

... 5ம் பக்கம் பார்க்க

பிராந்திய பணிப்பாளர் சுந்தர் பேச்சு

# சிந்திக்கும் திறன் ஆத்மீக வழிபாடு எமக்குப் பேருதவி

''மேலைநாடுகளில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த போதிலும் அமைதியில்லாத நிலை தொடர்வதை காணக் கூடியதாக உள்ளது. தமிழர்களின் கலாசார முறைகளும், சிந்தித்துணரும் தன்மையும் ஆத்மீக வழிபாடுகளுமே எந்த சக்திகளாலும் எம்மினத்தை அழிக்க முடியாத நிலையை வலுப்படுத்த உறுதுணையாகின்றது.

மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி அந்நிய தேசங்களில் அகதிகளாகச் செல்லும் நிலை மாறி தாம் பெற்ற கல்வியின் துணை கொண்டு மேலை நாடுகளில் தமது பணியைத் தொடர முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில்கூறினார்.

கல்லூரி அதிபர் கே. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட சாவகச்சேரி கோட்டக் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. தயஞ்சயன் பேசுகையில் கடந்த ஆறு ஆண்டு காலமாக ஏற்பட்ட இன்னல்களின் போதும் மாணவர்கள் தமது கல்வியில் திறமைகளை கலட்டியமை பாராட்டிற்குரியது. தற்போதய சீரான காலத்தில் மாணவர்களின் கல்வித் திறன் அதிகரிப்பு ஏற்பட்டு வருங்காலத்தில் பரிசில் பெறுவோரின் தொகை அதிகரிக்கலாம்' என்றார்.

கல்லூரியின் முன்னாள் அதிபர்களான பூ வெற்றிவேலு, க. மசேஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினர். (ப-3)

அங்கிலிக்கன் திருச்சபையின்

# கொழும்பு திருமண்டல பேராயர் மாத இறுதியில் யாழ்-வருகிறார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட் திரு. யேயே. ஞானப்பிரகாசம் ஆண்டகை யூன் மாதம் கடைசி வாரம் உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு விஜயம் செய்ய விருக்கிறார்.

யூன் மாதம் 22ந் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் கிறிஸ்த்து நாதர் ஆலயத்தில் யாழ்ப்பாண திருச்சபை நற்செய்திக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் விசேட ஆராதனையில் அவர் அருளுரை நிகழ்த்துவார்.

இந்திய இராணுவத்தின் தாக்குதலால் மிகவும் பாதிக்கப்பட்டு தற்பொழுதுபுணவர் நிர்மாலாஞ் செய்யப்பட்டிருக்கும் உரும்பிராய் பரி.இம்மனு வேல் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து ஆராதனையை ஒப்புக் கொடுத்து 23ந் திகதி சனிக்கிழமை காலை அருளுரை நிகழ்த்துவார்.

24ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7மணியளவில் யாழ்ப்பாணம் பரி. யோவான் அலயத்தில் நடைபெறும் விசேட ஆராதனையில் அருளுரை நிகழ்த்துவார் அன்று மாலை நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனையை நிறைவேற்றி அருளுரை நிகழ்த்துவார்.

பேராயரின் உத்தியோக பூர்வமான விஜயத்தின் ஏற்பாடுகளை யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட் கலாநிதி டொனல்ட் கனகரட்னம் அடியார் செய்துள்ளார். (27.கி)

மாணவர் உணவு முத்திரைக்கு

# குறிப்பிட்ட பொருட்களையே கொள்வனவு செய்ய அனுமதி

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுக் கடைகளில் இருந்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களையும் பாடசாலை உபகரணங்களையும் மட்டுமே வாங்க முடியும்.

இதற்கான சுற்று நிருபம் ஒன்று கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளரினால் சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கும், உதவிக் கல்விப்பணிப் பாளர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மோசடி, வீண் விரயம் போன்றவற்றைத் தடுப்பதற்காகவே மதியஉணவுத்திட்டத்திற்குப் பதிலாக இவ் உணவு முத்திரைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. எனவே இவ் உணவு முத்திரைகள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது. (43கி)

# சிரித்திரன் கரவெட்டியில் சுந்தருக்கு பாராட்டுவிழா

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களின் கலைப்பணியைப் பாராட்டுவதுடன் அவரது சிரித்திரன் சித்திரக் கொத்து என்னும் நூலின் அறிமுக விழாவையும் நடத்தவுள்ளது.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் எதிர் வரும் பத்தாம் திகதி நடைபெறவுள்ள இவ் விழா விற்கு த. சிதம்பரப்பிள்ளை தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்ளுகிறார்.

தெணியான், குப்பிளான் சண்முகம், வி.என். எஸ். உதயசந்திரன் ப நெல்லை க. பேரபன்க. அரசரட்னம் ஆகியோரும் வி. பு. ம. முன்னணியின் கலாசாரப் பிரிவு கவ்ஞர் காசிஆனந்தன் வி.பு, ம, முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினர் செங்கதிர் வ,பு ம, முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை ஆகியோரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

வைத்திய கலாநிதி எம். கே முருகானந்தன் சிரித்திரன் சித்திரக் கொத்து நூலை அறிமுகம் செய்து வைக்க கட்டைவேலி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை உறுப்பினர் புஸ்பநாயகம் நூல் பிரதிகளை வழங்குவார். (கி)

# மட்டு பல்கலைக்கழக பணியாளர்சங்கம்

(மட்டக்களப்பு

கிழக்கு பல்கலைக்கழக கல்வியணிசாராப் பணியாளர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் ஆர். இராகேஸ்வரன் செயலாளர் எஸ்.எஸ்.சூரியகாந்தன் பொருளாளர் கே எல்.எம். நஸிர், உபதலைவர் கே.க.கருணாகரன், உபசெயாலாளர் எம். சிவதாஸன்.

பதின்மூன்று பேர் கொண்ட நிர்வாககுழு தெரிவு செய்யப்பட்டது. (0கி)

# சுகாதாரநிலையம் அமைக்க நிதியுதவி

கிளாலியில் ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்க ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியை ஆரம்பசுகாதார நிலையம் கிணறு விடுதி ஆகியவை அமைக்க பயன்படுத்துவதாகவும் அறியப்படுகிறது. (ப3)

# இடியப்பத்தின் விலை கொழும்பில் அதிகம்

கொழும்பு இடியப்பத்தின் விலை உயர்ந்துள்ளது. மாவின் விலை உயர்ந்ததை அடுத்து கொழும்பு ஹோட்டல்களில் இடியப்பத்தின்விலையும்உயர்ந்துள்ளது.

இதுவரை காலமும் 70 சதமாக விற்கப்பட்டுவந்த இடியப்பம் தற்போது 75 சதமாக விற்கப்படுகின்றது. (7கி

# கொடிகாமம் இணக்க சபை தெரிவு

(நாவற்குழி)

கொடிகாமம் பிரதேச இணக்க சபைத் தெரிவு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது,

கொடிகாமம் பிரதேசப் பெறுப்பாளர் திரு. ராகுலன் தலைமையில் நடைபெற்ற இத் தெரிவுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் பாப்பா கலந்து கொண்டு இணக்கசபை அங்கத்தவர்களுக்கான விதிமுறைகள் பற்றியும் சட்டதிட்டங்கள் பற்றியும் பொமக்களுக்கு விளக்கிக் கூறினார்.(ப5)

# ரிச்சர்ட் கொலை விசாரணைக்கு கோரிக்கை

1990ம் ஆண்டுக்கான சர்வதேச பத்திரிகையாளர் விருது கொலையுண்ட ரிச்சர்ட் டீ சொய்சாலின் ஞாபகர்த்தமாக வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான வைபபம் இன்று நியூயோர்க்கில் உள்ள 2நா, தலைமையகத்தில் செப்டம்பர் ம்ாதம் 18 ஆம் திகதி நடைபெவுள்ளது.

ரிச்சர்ட் டீ சொய்ரா கடத்தப்பட்டு கொல்லப்பட்டமை குறித்து விசாரிக்குமாறு ஐ. நா. செயலாளர் நாயகம் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் நிலையத்திற்கு சடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். (7கி)

# கோப்பாய் மயானத்தில் திருத்த வேலை

(கோப்பாய்)

நீண்ட நாட்களின் பின்னர் கோப்பாய் மயானத்தின் திருத்த வேலைகள் கோப்பாய் பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி கட்டிடத்தின் தள வேலைகளும், கூரை வேலைகள் முற்றாகவும் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (23கி)

# தலவாக்கொல்லையில் இரண்டுநாள் கலைவிழா

தலவாக் கொல்ல சென்பற்றிக்ஸ் கல்லூரியின் கலைவிழா 9-ம் 10-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் சங். சகோதரி எம்.யூலியா தலைமையில்நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக கொட்டகல எதன்சைட் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் என். நடராஜா கலந்து கொள்ளுவார்.

முதலாம் நாள் நிகழ்ச்சி மாணவர்களுக்கும்இரண்டாம் நாள் நிகழ்ச்சி பெற்றோர் மற்றும் பெரியவர்களுக்கும் நடாத்தப்படும்.

செல்வி எம். பவானியின் நடன நிகழ்ச்சி உட்பட இருபத்தியொரு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# தமிழர் ஆசிரியர்சங்க எழுச்சி மகாநாடு

(நாவற்குழி)

இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க பதினாறாவதுஆண்டு நிறைவு எழுச்சி மாநாடு இம்மாதம் எட்டாம் திகதி யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருக்கிறது,

சங்கத்தலைவர் கா. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச்செயலாளர் வெ சபாநாயகம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம். வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ். சந்திரராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள். (ப-5-சி)

# தொல்புரத்தில்

தொல்புரம் மத்தி கொட்டடியம் பதி அருள் மிகு ஆதி முத்து மாரியம் பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று 8ம் திகதி ரதோற்சவமும் மாலையில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். 9ம் திகதி மாலை அம்பாள் வீதி வலம் இடம் பெறும். (36கி)

# அம்பனில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

அம்பன் அரசினர் வைத்திய சாலை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் இணைந்து இச்சிரமதானப் பணியை மேற் கொண்டனர்.

இச்சிரமதானப்பணியின் போது வைத்தியசாலையின் உட்பகுதியும் துப்பரவு செய்யப்பட்டதோடு வெளிப்பகுதியில் உள்ள பற்றைகள் புல் பூண்டுகளும் அழிக்கப்பட்டன.

# இயக்கச்சியில்

(உருத்திரபுரம்)

இயக்கச்சி அருள் மிகு திரியாய் அம்மன் வைகாசிப் பொங்கல விழா இன்று நடைபெறவுள்ளது, பக்தர்கள் நலன் கருதி சென், ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப்படை சிகிச்சை முகாம் அமைத்து பாதுகாப்பு வீதி ஒழுங்குகலில் ஈடுபடுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட படைப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். வீ. சிறிதரன் தலைமையில் கீழ் கிளிநொச்சிப் பொறுப்பதிகார் செல்வன் பா கனேசமூர்த்தி உவுத்திய புரம் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி செல்வி க கலாமதி ஆகிய 20 முதலுதவிப்படையினர் இந்தக் கடமையில் ஈடுபடுவர். (ப.6,கி)

# முதலுதவிப் பயிற்சி

வைகாசி 28, 29-ந் திகதிகளில் வல்வெட்டித்துறை வல்வைக் கல்வி மன்றத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பருத்தித்துறை உதவி இளைஞர் சேவை அதிகாரி செல்வி க. சிவறஞ்சனி தலைமையில் முதலுதவிப்பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை நடாத்துவதற்கு காங்கேசன்துறை சாரண மாவட்ட ஆணையாளரும், யாழ். மாவட்ட பிரதேச ஆணையாளருமான என். போஜனும் அவருக்கு உதவியாக உதவி இளைஞர் அதிகாரி க. ஸ்ரீகந்தவேளும் கடமையாற்றினர். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 90க்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொண்டு சான்றிதழ்களைப் பெற்றனர். (52கி)

# அபிவிருத்தி சங்க வருடாந் தகூட்டம்

கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடந்ாந்தப் பொதுக்கூட்டம் பனைப் பிராந்திய கிராம அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் தலைமையில் அண்மையில் கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்புவருட நிர்வாவாகிகளாக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- பே. செபஸ்தியாம்பிள்ளை, உபதலைவர்- வ. பரியநாயகம், செயலாளர்- இ. அன்ரன் ஜெயரத்தினம், உதவிச் செயலாளர்- செ. துரைரத்தினம் பொருளாளர் மு. சிவராசா, ஏழு பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டனர். (ப.3)

# மெமோறியல் மெய்வல்லுநர் போட்டி

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி 9ம்திகதி பாடசாலை அதிபர் அ. மு. அருணாசலம் தலைமையில் நடைபெறும்.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா'சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (45கி)

அரியாலையில்

# சம்பந்தர் குருபூசை

நாளை9ம்திகதிசனிக் கிழமை மாலை 6 மணிக்கு அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் மண்டபவத்தில் சம்பந்தர் குருபூசை அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தினால் நடாத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 6. 30 மணிக்கு நல்லைக் குரு மணியின் பிரதம சீடன் இராமாயண கதா திலகம் கந்தர் மடம் பிரதம ஸ்ரீ சி வை நித்தியானந்த சர்மாவின் சிவஜோதி என்னும் பொருள் பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

# சாவகச்சேரி வெளிநோயாளர் பிரிவு இயங்கும் நேரம்

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு முதலாம் திகதி முதல் வார நாட்களில் காலை 8.00 மணீ முதல் 11.00 மணி வரையும் பி. ப. 2.00 மணி மிதல் 04.00 மணி வரையும், ஞாயிறு பொது விடுமுறை நாட்களில் காலை 8,30 மலுமுதல் 10.30 வரை இயங்குமென வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

# பாக்கு நீரிணையில் இந்திய ரோந்து ஆயுதக் குழுக்கள் நடமாட்டத்தை தவிர்க்க

(சென்னை)

பாக்கு நீரிணைப்பகுதியில் இந்திய கடற்படை கப்பல்களினதும் கரையோர ரோந்துப் படகுகளினதும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்க இந்திய மத்திய அரசு நடவக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கோ அல்லது இந்தியாவில் இருந்து இலங்கைகோ ஆயுதக் குழுக்கள் சென்று வருவதை தடுக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தமிழக அரசு தெரித்துள்ளது. ரோந்து நடவடிக்கையை அதிகரிப்பதன் மூலம் இரு நாடுகளிடையே நடைபெற்றுவரும் கடத்தல் நடவடிக்கைகளையும் தடுக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை தமிழகத்தில் ஏற்பட்டு வரும் இலங்கை தமிழ் இளைஞரின் ஆயுதக் கலாசாரத்தை தடுப்பதற்காக தமிழக பொலிஸாருக்கு நவீன ஆயுதங்களை கையாள்வதற்கென் பயிற்சியை அளிப்பதற்காக மத்திய அரசு பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்றையும் தமிழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

## கிழக்கின் உப-வேந்தர் அறிவுரை

# ''பிரச்சினைகளை பேச்சுக்கள் தீர்த்து வைக்க உதவும்''

(மட்டக்களப்பு)

தொழிற்சங்கமென்பது நிர்வாகத்திற்கு எதிரானதொன்றல்ல. நிர்வாகமும்- தொழிற்சங்கமும் இணைந்து செயல்படுவதனால் பல பிரச்சினைகளை இலகுவாக பேசித் தீர்த்துக் கொள்ள முடியும்''.

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக கல்வியணி சாரா பணியாளர் சங்கத்தின் 5-வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ் சந்தானம் தெரிவித்தார்.

மேற்படி பொதுக் கூட்டம் கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் தலைவர் திரு. எம். வர்ணகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;- கல்வியணி சாரா பணியாளர் சங்கம் ''கிழக்கொளி'' எனும் காலாண்டுச் சஞ்சிகையை வெளியிட்டதன் மூலம் கல்வியணி சார்ந்தவர்களது சங்கங்களுக்கு ஈடாக தோற்றமளிக்கிறது'' என்றார்.

மேற்படி சங்கத் தலைவர் திரு. எம். வர்ணகுலசிங்கம் தனதுரையில்:- கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை அரசாங்கம் குறைத்து பல்கலைக்கழகத்திற்கான நிதி ஒதுக்கீட்டையும் குறைத்து விட்டது என்றார்.

செயலாளர் திரு. எஸ். சூரியகாந்தனும் உரை நிகழ்த்தினார். (05)

---

**பயன் பல**

மாகி, இத்தொகுதி மரவளர்ச்சியால், கையாள்பவருக்கு எட்டாத உயரத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வியல்பு பனைமர வகையைச் சேர்ந்த பாம்களின் ஆராய்ச்சி ஈடுபட்டுள்ளோருக்கு அவதானிப்புக்களைமேற்கொள்ள முட்டுக்கட்டையாக உள்ளது மேலும் பனையில் பூ தோன்றும் வயது மிகக்கூடியது (15 வருடங்கள்).

இதன் விளைவாக பனையின் உச்சியின் உள்ள இலைப்பகுதி மிக உயரத்தில் அமைந்திருப்பதால் பாம்களில்பூக்கும் காலத்தில் அவதானங்களை எடுப்பது கடினம். பூந்துணர்களிற் சுரக்கும் பதநீர் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிஇதனால் இன்னும் விஞ்ஞானிகளால் கவனிக்கப்படாத துறையாகவே உள்ளது.

பனைமரம் கொண்டுள்ள ஒரேயொருவளர்ச்சிப்வளர்ச்சி அரும்பு, அதாவது அதன் உச்சிப்பிரியிழையானது கிளைகொள்ளாததண்டின் உச்சியில் அமைந்திருக்கின்றது. இங்கு இருவித்திலைத்தாவரங்களுக்குப் பிரத்தியேகமான பக்கப்பிரியிழையம், அல்லது மாறிழையும் இல்லையெனவே கொள்ள வேண்டும். எனவே பாம்களில் உச்சிப்பிழையத்திலிருந்து முதலான இழையங்கள் உருவாக்கப்பட்ட பின் சுற்றளவில், அல்லது விட்டத்தில், அதிகரிப்பு ஏற்படுவதில்லை.

இதின் விளைவாக, அடிமரமானது உச்சிப்பிரியிழையம் தனது முழுக்குறுக்களவில் உள்ள கலன்களை உருவாக்கிய பின்னரே விருத்தியடைகிறது. அததுடன் தண்டானது உச்சியிலிருந்து தோன்றும் குறுகிய கணுவிடைகளின் காரணமாக படிப்படியாக வளர்கிறது.

இவ்வியல்புகளிலிருந்து பனையின் தண்டில் உச்சிக்கு கீழ்ப்பகுதிகளில் புதிய கலன்கள் எதுவும் உருவாக்கப்படுவதில்லை என்பதே ஏற்கக்கூடிய விளக்கம். உச்சியரும்பிலிருந்துமேற்பட்டைக் கலன்கள் அல்லது கடத்தும் கலன்கள் (கலனிழையம்) வியத்தமடைந்தபின்கீழ்மரத்திலுள்ள இக்கலன் அதிகரிப்புகளில் ஏற்தில்லை.

அதாவது தண்டு உச்சியில் ஏற்படும் ஏதாவது பாதிப்பு பாமிற்கு ஆபத்தை விளைவிக்கும், அத்துடன் உச்சியில் ஏற்படும்வளர்ச்சி மாற்றறுகளால் மட்டுமே வளர்ச்சி பற்றிய பரிசோதனைகளைத் திறமையாகச் செய்ய இயலும். மேலும் பனைமரத்தின் ஏனைய பாகங்களில் ஏற்படும் காயங்களை வளர்ச்சி சீர்படுத்துவது இயலாமலிருக்க வேண்டும். எனினும் சில பனைமரங்கள் அடிமரத்திலுள்ள தழும்புகளையும், குழிகளையும் ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் தாங்கி வளர்கின்றன. இவவியல்பின் விளக்கம் தற்போதையதாவரவியல்அறிவிற்கு அப்பாற்பட்டதாயுள்படுவளது.

பனைவித்துக்களின் முளைக்கும் இயல்பு விஷேடமானது (Remotive Germination) முளைக்கும் பொழுது தோன்றும் 'கிழங்கு' முளையத்தை நிலத்தின் கீழ் 15 செ. மி (6') வரைஇழுத்துச்செல்லும்இதன் பின்னரே முளைத்தண்டு (plumule) மேல்நோக்கி வளரும் இவ்வியல்பு பனைவித்துக்களை இலகுவில் கையாளக் கூடியபொலித்தீன்உறைகளில் வளர்த்து விநியோகித்தலைக் கஷ்டமாக்குகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில் பனங்கிழங்கிலிருந்து கன்றுகளை உண்டாக்கி, பொலித்தீன் உறைகளில் பல வருடவயதுவரை வளர்க்கும் முறையொன்றினைக் கையாண்டுள்ளனர். இம்முறை பனை அபிவிருத்திங் சபைக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (Kandiah & Mahendran, 1986)இம்முறை இலகுவில் கையாளக் கூடியகட்டைப்பனைகளை உருவாக்க உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பாம்களின் வளர்ச்சியானது ஏனைய பச்சைத் தாவரங்களைப் போல இலைகளில் ஒளித்தொகுப்பின் விளைவாக ஏற்படுகிறது பல பனந்தோப்புக்களில்ஒருஹெக்டயருக்கு 600 மரங்கள் வீதம் வளர்க்க முடியும். இத்தகையதொரு தாவர நிலையின் வளர்ச்சியானது உலர் நிறை உற்பத்தி வடிவில் வெளியிடப்படுவது மரபு 600 பாம்களில் இருந்து பெறப்பட்ட வழமையான பனம் பொருள் உற்பத்திகளின் உலர் நிறை விளைவு அளவீடுகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து ஒவ்வொரு பனையும் கீழே காட்டப்பட்டுள்ள உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படுமென ஊகிக்கப்படுகிறதென்பது கவனிக்கப்பட வேண்டும்.

## தீவிபத்தில் சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சரம் வேட்டையன் முறிப்பைச்சேர்ந்த தங்கராசா சீதாலக்குமி (8) என்றசிறுமி விளக்கு விழுந்து நெருப்புப்பற்றியதால் பலத்த எரிகாயங்களுக்குட்பட்ட நிலையில் மன்னார் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலும் மோசமான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்டு நேற்று காலை மரணமானார். (75.கி)

## நுண்தொழில் இலைஞன் வெளியீட்டு விழா

யாழ் தொழிலுட்பக் கல்லூரியில் நுண் தொழில் இளைஞன் சஞ்சிகை வெளியீட்டு விழா 10 ம் திகதி கலை 9 00 மணிக்கு கல்லூரி அதிபர் சி. இராஜேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தொழினுட்பக் கல்லூரி பணிப்பாளர் டபிள்யூ சமரசிங்க கலந்து கொள்ளுவார்.

சிறப்பு விருந்தினர்களாக கே. சண்முகநகதன் மேலதிக அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் ஏ ரி. தர்மபிரிய மேலதிகபணிப்பாளர் தொழினுட்பக் கல்லூரி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுவார்கள்.

## இளாரி அந்தோனியார் உற்சவம்

இளாரி புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் ஆறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பன்னிரண்டாம் திகதி இரவு திருப்பலி பூஜையும் திருநாள் ஆராதனையும் பதின்மூன்றாம் திகதி காலை திருச்சொரூப பவனியும் இடம் பெறும்,

நவநாள் ஆராதனைகள் மிருசுவில் பங்குத்தந்தை அருட் திரு. லோரன்ஸ் சேவியர் அடிகளால் நடாத்தப்படும்.

## தாய்லாந்தில் எயிட்ஸ்

ஆகக் குறைந்தது 575 தாய்லாந்து இராணுவ வீரர்களுக்காவது எயிட்ஸ் நோய் பிடித்திருக்கலாம் மென்று தாய்லாந்து இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த 572 பேரில் நால்வரின் நிலைமை மிக மோசமானது ஏனையோர்நோய்க்காவிகள் உடையவர்கள் இவர்களில் நால்வர் தாம் தன்னினச் சேர்க்கையாளர்கள் என்பதை ஒத்துக் கொண்டனர் 226 பேர் போதைவஸ்துப் பழக்கமுடையவர்கள் நோய்க்காவிகள் கொண்ட கிருமிகள் மூலம் இலங்காரர் நோய் தொற்றியிருக்கும் மெனக் கூறப்படுகிறது.

# செய்தி மஞ்சரி

## இந்தியக் குழு இலங்கையில்

இலங்கையைச் சேர்ந்த நூறு பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கும் 400 பட்டதாரி மாணவர்களுக்கும் புலமைப்பரிசில்களை வழங்கும் இறுதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக இந்திய குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது.

இக்குழு உயர் கல்வித் திட்ட அமைச்சருடன் புலமைப் பரிசில்கள் தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

இந்தியாவின் டில்லி, பஞ்சாப், ஆந்திரா ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களுடன் இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழுவின் இணைச்செயலாளரும், இந்தியத் தூதரகத்தின் கல்விச் செயலாளரும் இந்தியத் தூதுக் குழுவில் இடம்பெற்றனர். (7)

## பொதுவான பயிற்சித் திட்டம்

அரசு மற்றும் தனியார் துறையின் சகல தொழிற் பயிற்சி நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்படும். பொதுவான தொழிற்பயிற்சித் திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப் படும்.

இதற்காக நாட்டில் இயங்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடர்பாகக் கணக்கெடுப்பு ஒன்று நடத்தப் படும். வருடாந்தம் 2,50,600 பேருக்கு முறையான தொழிற் பயிற்சி வழங்கும் நோக்குடன் இத் தீர்மானம் கொண்டுவரப் படும்.

அரச துறையினராலும், தனியார் துறையினராலும் மேற் கொள்ளப்படும் சகல தொழிற்பயிற்சிப் பணிகளும் ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

## பொறுப்பு கை மாறுகிறது

சூழலை மாசுபடுத்தக் கூடிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அனுமதி வழங்கும் பொறுப்பு யூலை மாதம் முதல் சூழல் பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சூழல் பாதுகாப்புச் சபை தனது பொறுப்புக்களைப் பிரதேச ச்பைகளிடம் ஒப்படைத்துள்ளது,

இது தொடர்பாக இம் மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள மகாநாட்டில் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் மட்டும் அழைக்கப்படவுள்ளனர். (7கி)

## சான்றிதழ்கள் தபாலில்

1986, 1987, 1988 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கான சான்றிதழ்களைச் சகல பாடசாலைகளுக்கும் பரீட்சை ஆணையாளர் அனுப்பிவைத்துள்ளார். (7கி)

## புள்ளடியைத்தெளிவாக இடுங்கள்

க. பொ. த சாதாரண உயர்தரப் பரீட்சைகளின் போது பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும் மாணவர்கள் விடைக்காக குறிப்பிடப் படும் புள்ளடி சில சந்தர்ப்பங்களில் தெளிவாகத் தெரிவதில்லை என விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும் மாணவர்கள் தெளிவாக புள்ளடியை இடுமாறு அறிவுரை வழங்குமாறு சகல பாடசாலைகளுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.

மாணவர்கள் புள்ளடி இடுவதற்கு உ. பி. வகையான பென்சில் ஒன்றையும் உபயோகிப்பது பொருத்தமானது எனவும் அச் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7 கி)

## தம்பிமுத்துவின் இடத்திற்கு....

காலம் சென்ற மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாம் தம்பிமுத்துவின் இடத்துக்குப் பரராஜசிங்கம் யோசப் நியமிக்கப்படவுள்ளார்.

தேர்தல் சட்டப்படி வி. ஜோசப் பாராளுமன்றத்திற்கு தொடர்ந்து மூன்று மாதம் செல்லாது விடினும் அல்லது இராஜினாமாச் செய்ய முற்படினும் — அவரது இடத்திற்கு வேட்பாளர் பட்டியலில் அவருக்கு அடுத்ததாகவுள்ள கந்தையா அல்பேட் சீவரத்தினம் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்படுவார். (7சி)

## தொண்டர்கள் இங்கு வருவர்

ஐக்கிய நாடுகள் தொண்டர் சேவையாளர் திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 1991 — 1992 ஆம் ஆண்டிற்கான 31 தொண்டர்களை தெற்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளவிருக்கின்றது.

மேற்படி தொண்டர்கள் மாவட்ட ரீதியாக நாட்டின் சகல இளைஞர் கழகங்களுடன் தொடர்பு கொண்டு பிரதேச, சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் கைச்சாத்திடப்பட்டது. (7கி)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# குடத்தனைச் சம்பவம், அதிபர் தரும் விளக்கம்

ஆசிரியர்
முரசொலி

தோ. செபமாலை ஆகிய நான் 1951 ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஆசிரியப் பணி புரிந்துவருகின்றேன். 1971 ம் ஆண்டு முதல் 11 ஆம்தர அதிபராகவும் கடமைபுரிகின்றேன் என் சேவை பற்றி இப்பிரதேச மக்கள் நன்றாக அறிவர் கல்வித்திணைக்களமும் என் செயற்பாடுகள பற்றி அறிவர். இதுமட்டுமன்றி நான் பருத்தித்துறைக் கிளையின் தமிழர் ஆசிரியர் சங்க தலைவராகவும் வடமராட்சிக் கிளையின்கத் தாலிக்கஆசிரியர் சங்கத்தலைவராகவும் பணியாற்றுகிறேன். இதனைவிடப்பலபொதுநல ஸ்தாபனங்களிலும்ஈடுபாடுஉடையவனாகவும் இருந்து யாவராலும் நன்கு அறியப்பட்டும் மதிக்கப்பட்டும் வருகின்றேன்.

நடந்தது இதுதான்: இரு மாணவரிடையே ஏற்பட்ட கைகலப்பு: ஒருவர் கல்லெடுத்து மற்றைய மாணவனைக் குத்தத் துரத்தினார். இச் செய்தி பற்றிய முறைப் பாடு மாணவரால் எனக்கு கொண்டு வரப்பட்டது. உடனே குறிப்பிட்ட மாணவனை அழைத்து விசாரித்தேன். குற்றத்தை உணர்த்தி ஒரு, சிறிய பூவரசம் தளிர்த் தடியால் அவரின் கீழ்க்காலில் 4, 5 அடி அடித்தேன். இவ்வேளையில்வகுப்பறையில் ஆசிரியர் மூவர். இருந்தனர். மாணவர்களும் பலர் இருந்தனர்.

குறிப்பிட்ட மாணவரின் காலில் கருக்கு வெட்டியதால் ஒரு காயம் அவனது காலில் இருந்ததைத் நானும் பல ஆசிரியர்களும் நன்கு அறிவோம். மாணவரும் அறிவர். வைத்திய சாலையில் பையனைக் காணச் சென்ற அருட் தந்தை தவத்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளாரும் நன்கு அறிவார்

பருத்தித்துறை வைத்தியசாலையின் அறிக்கைப்படி சம்பந்தப்பட்ட பையனின் காலில் புக்கை கட்டப் பட்டிருந்ததென்றும், புக்கை கட்டப்பட்ட இடத்தில் நோய்க்கிருமிகள் பற்றியதால் தோலின் கீழ் அழற்சி ஏற்பாட்டதால் சீழ் பிடித்ததென்றும் மேற்படி சீழைப்போக்க நடவடிக்கை மேற்கொண்டதென்றும் நரம்புகள் எவையும் பாதிக்கப்படவில்லை என்றும் எலும்பு முறிந்ததற்கான அறிகுறியும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கருணை கூர்ந்து எனக்கு ஏற்பட்ட அவமானத்தை நீக்கத்தக்கதாக இச் செய்தியைப் பிசுரித்து என் மானத்தைக் காப்பாற்றும் வண்ணம் இரந்து பணிவன்புடன் கேட்டு நிற்கிறேன்.

இப்படிக்கு
அவமானத்தால் துடிக்கும் அறுபது வயதை ஆடி மாதம் 14ம் திகதி 1990 ஆம் ஆண்டில் முடித்து ஓய்வு பெறப்போகும் அதிபர்

தோ. செபமாலை

# சைக்கிளோட்டப் போட்டி; நேரம், காலம் வேண்டாமோ?

ஆசிரியர்
முரசொலி

நாட்டு நிலைமை இப்போதெல்லாம் படிப்படியாக சீரடைந்து வருகின்றது. இதனால் முன்னரைப் போன்று வழமையான நிகழ்சிகள் வைபவங்கள், கொண்டாட்டங்கள் என்பன களைகட்டத் தொடங்கி விட்டன. இந்தவகையில் விளையாட்டுப் போட்டிகளும் பரவலாகக் குடாநாட்டில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவையெல்லாம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று தான் என்பதனை மறக்கவில்லை. ஆனால் அதற்காக சனி, ஞாயிறு தவிர்ந்த வீதிகளில் மிகுந்த வாகன போக்குவரத்து, ஜனவீதி நெரிசல் உள்ள நேரங்களிலும் குறிப்பிட்டுச் சொல்வதானால் காலை 9, 00மணிக்கு முன்னராகவே பிராதன வீதிகளில் கண்டபடி சைக்கிளோட்டப் போட்டிகளை நடத்துவதா; நாம் புத்திஜீவிகள் என்று நமக்குள்ளேயே மீற்றிக் கொள்வதில் பயனில்லை. நாகரிகம், மக்கள் நலன் என்பவற்றுக்கும் பொருள் இருக்கும் படியாக நாம் நடந்து கொள்ளவும் வேண்டாமா? சிந்தனையில் தெளிவு தேவை.

மட்டுவில் தெற்கு

யசோதரன் சஞ்சீவ்

# பாடசாலை உணவு முத்திரை பயன் பாட்டுக்கு கட்டுபாடு

(மட்டக்களப்பு

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்யட்டு ஒரு மாதகாலத்திற்குள் அதற்கான உணவு பொருள்களை கொள்வனவு செய்யப்பட வேண்டும். கால எல்லைக்குள் உபயோகிக்கப் படாத முத்திரைகள் அக்கால எல்லையின் முடிவில் அவை ரத்துச் செய்யப்பட்ட முத்திரைகளாக கருதப்படும் என சமுக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை மதிய போசன உணவு முத்திரைகள் தனித்தனித்யாகவோ அல்லது ஒரு தொகையாகவோ வெட்டி எடுக்கபாட முத்திரைகளை அப்படியே ஒப்படைத்து ஒருதடவையிலேயே பொருட்ல்ளை கெபள்வனவுசெய்ய வேண்டும்

இம் முத்திரைகளை பணமாக மாற்றவு கூடாது முழுப்பெறுமதிக்கும் பொருட்கள் கொள்வனவு செய்யப் படஃ வேண்டும் எனவும் சமுகசேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது,(2)

(5 கி)

மட்டு மாவட்டத்தில்

# காணி பெற 1081 அரசஊழியர் விண்ணப்பம், விரைவில் காணிவழங்க துரித ஏற்பாடுகள்

(மட்டக்களப்பு)

காணி யற்றோருக்கு காணி வழங்கும்ஜனாதிபதியின் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில்1081 அரசாங்க ஊழியர்கள் வதிவிட காணி கோரி விண்ணப்பித்துள்ளனர்

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்டகாணி ஆணையாளர் திருமதி எஸ். கே. அன்னராஜ் ''முரசொலிக்கு'' தெரிவித்தார்.

மேற்படி விண்ணப்பங்கள் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் தரம் பிரிக்கப்பட்டு அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அரசாங்க காணிகள் இவர்களுக்கு பகிர்ந்தளிக்கப் படும்.

தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் தரத்திலுள்ளவர்களிடமிருந்து 17 விண்ணப்பங்களும், நடுத்தர ஊழியர்களிடமிருந்து 768 விண்ணப்பங்களும், சிற்றூழியர்களிடமிருந்து 296 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளதாக திருமதி அன்னராஜ் மேலும் தெரிவித்தார். (5 கி)

## 30ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்க வேண்டும்

# சைவசமய பாடப் பரீட்சை நவம்பர் 4ம் திகதி நடைபெறும்

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் 1990ம் ஆண்டிற்கான சைவ சமயப் பாடப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 30ந் திகதியாகும்,

இதற்கு விண்ணப்பங்களைக் கோரும் படிவங்களும், விதிகளும், பாடத்திட்டங்களும் சைவ பரிபாலன சபையின் பரீட்சைக் காரிய தரிசியினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை இவ்வருடம் நவம்பர் மாதம் 4ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 . 30 மணிக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப5கி

# இணக்க மன்றுகள் இயங்குகின்றன

கொக்குவில், கந்தர்மடம், திருநெல்வேலி கிழக்கு மேற்கு, இருபாலை ஆகிய இடங்களுக்கான இணக்க மன்றுகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கல் வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இடங்களில் முறையே இந்த இணக்க மன்றுகள் தமது அமர்வை ஆரம்பித்தன. (கி

# அக்கினிப் பூக்கள்

(நாவற்குழி)

வீ.எஸ்.குமாரசாமியின் தயாரிப்பில் உருவாகும் ராதிகா மூவிஸாரின் இரண்டாவது தயாரிப்பான ''அக்கினிப் பூக்கள்'' படத்திற்கான நடிகர்கள் தெரிவு நடைபெறுகிறது.

இப்படத்தின் இயக்குனராக டிங்கிரி கனகலிங்கம் கடமையாற்றுகிறார். (ப 5)

# வைரவேஸ்வரர் ஆலய உற்சவப் போட்டிகள்

இளவாலை ஒல்லுடைப்பதி வைரவேஸ்வரர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தினர் பல்வகைப்பட்ட போட்டிகளை நடாத்தவுள்ளார்கள்.

பேச்சுப் போட்டி, மனைப் போட்டி, மாலை தொடுத்தற் போட்டி, ஆலயத் தரிசனப் போட்டி, போன்ற போட்டிகளை நடாத்தப்படவுள்ளன.

ஆலய உட்சவ தினங்களான பன்னிரு நாட்களும் விசேட சொற்பொழிவு நிகழ்ச்சி தினமும் மாலை 7.30 மணிக்கு இடம் மெறவுள்ளது. இந் சொற்பொழிவு நிகழ்ச்சியினை சங்கநாபுக் குழுவினர் வழங்கவுள்ளபர்கள் 25 கி

# கூட்டுறவுச் சங்க வருடாந்த கூட்டம்

கிளிொநச்சி மாவட்டசிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்ங்ககளின்சமாசத்தின்வருடாந்தப் பொதுக் கூட்டம் ஜூன் பதினைந்தாம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு மாவட்டத்திலுள்ள சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் சார்பில் ஒரு பிரதிநிதி கலந்து கொள்ளுமாறு சமாசச் செயலாளர் செல்வ சா. கந்தையா அறிவித்துள்ளார். (ப.3)

# கிளாலி மாணவர் தெரிவு

கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவ மாணவிகள் கிளிநொச்சி மாவட்டரீதியில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் நாடகம், பா ஓதுதல் பேசுதல் ஆகியவற்றில் முதலிடம் பெற்றுள்ளனர். (ப-3-கி)

## சுவையான செய்திகள்

# தும்மலா... கவனம்!

தும்மலைச் சாதாரணமாக நினைக்கவேண்டாம், அதுவே சில சமயங்களில் பெரிய ஆபத்துக்களையும், விபத்துக்களையும் ஏற்படுத்தி விடும்.

அமெரிக்காவில் ஒருவர் கார் ஓட்டிச் சென்ற போது பரங்கரத் தும்மல் ஒன்றைப் போட்டார் உடனே, கார் கட்டுப்பாட்டை இதறிழந்து கெட்டு எதிரே வந்த இன்னோர் காரின் மீது மோதியது. அவர் வாயில் இருந்து சிகரெட் கீழே விழுந்ததையும் அது புகைந்து காருக்குள் தீப்பற்றிக் கொண்டதையும் அவர் காணவில்லை. மோதலால் ஏற்பட்ட சேதம் சிறிதே என்றாலும் சிகரெட் மூட்டிய தீ அந்தக் காரையே எரித்து உருத் தெரியாமல் செய்துவிட்டது.

# குண்டாக இருந்தாலே அழகுதான்

நோர்வேயில் உள்ள காராஸ் ஜாக் லாட்ஸ் இனத்தவர்கள் குண்டான பெண்களையே அழகிகள் என்று கருதுகின்றனர். உடல் பருமனைக் குறைத்து ஒல்லியாக்க உணவுக் கட்டுப்பாடு என்ற பேச்சே அவர்களிடம் கிடையாது. அதற்குப் பதிலாகப் பெருக்க வைக்க அவர்களுக்கு அதிகத் தீனியும் டொனிக்கும் கொடுக்கின்றார்கள்.

மணப்பெண் ஒல்லியாக இருந்து விட்டால் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஐந்து அல்லது அறு ஆடைகளை உடுத்தச் செய்து குண்டாக தோற்றம் அளிக்கச் செய்கிறார்கள்.

# வாயடிக்கும் பெண்களுக்கு

ஜேர்மனியில் மத்திய காலத்தில் வதந்தியைப் பரப்பும் பெண்களுக்கும், வளவளா வாயாடிப் பெண்களுக்கும் கடுமையான தண்டனை அளிக்கப்பட்டது.

இந்தப் பெண்களுக்கு பெரிய முயற் காதுகளையும் நீண்ட காதுகளையும் உடைய அவலட்சணமான முகமூடியை அணிவித்து கழுதையில் ஏற்றி வீதிவலம் வரச் செய்யும் வழக்கம் அப்போது இருந்தது

இந்தத் தண்டனை இப்போதும் இருந்தால் நன்றாக இருக்கும் என்கின்றனர் சிலர் .....நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

# சட்டமா என்ன செய்யும்?

என்ன சட்டமோ என்ன தண்டனையோ என்று சலித்துக் கொள்ளும் அளவுக்குக் குற்றவாளிகள் பெருகிக்கொண்டு வருகிறார்கள். குற்றம் செய்தவர்களே மீண்டும், மீண்டும் குற்றத்தைச் செய்துவிட்டுச் சிறைக்குப் போகும் விசித்திரமான சாதனையாளர்கள் இங்கு ஏராளம் ஏராளம்.

நத்தம் என்ற ஊரைச் சேர்ந்த செங்கல்பட்டுக்காரர் ஒருவருக்கு வயது 45 ஆகிறது. இவர் இது வரை 64 முறை சிறைக்குச் சென்று ஒரு சாதனையைச் செய்திருக்கிறார். இவர் சுமார் பதினைந்து வருடங்கள் சிறையில் காலத்தை ஓட்டியிருக்கிறார்.

குற்றம் செய்த ஒருவன் திருந்தி வாழ வழியில்லாத போது, மீண்டும், மீண்டும் குற்றம் செய்கிறான். அல்லது சிறை வாழ்வு அவனிடத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்துவதில்லை,

சட்டமும் தண்டனையும் அவன் திருந்தி வாழ வழி செய்யவில்லை, இப்படி ஒரு போக்குத் தொடரலாமா?

அடுத்த ஆண்டிலிருந்து

# பாடசாலைகளில் பாடநேரம் ஒரு மணி நேரம் நீடிக்கப்படும்

அடுத்த ஆண்டில் இருந்து பாடசாலைகளின் பாட நேரம் மேலும் ஒருமணியால் நீடிக்கப் படவுள்ளது. இவ் மேலதிக நேர வகுப்புகள் பிற்பகலிலேநடத்தப்படும்.

இதனால் ஒரு மணித்திாலம் அதிகமாக கடமைலசய்ய நேரிடும் ஆசிரியர்களுக்கு அபிவிருதிச் சங்கங்கள் மேலக வேலைக்குத் தக்க சன்மானத்தை வழங்கவுள்ளது.

இந்த மேலதிக நேரம் ஆங்கிலம் தூயகணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிக்கப் பயன்படுதப்படும்

மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதால் இதையிட்டு மாணவர்கள் கவலைப்படமாட்டார்கள். எனக் கூறப்பட்டுள்ளது.

# இன்று மட்டுநகரில் கிராமியக் கலைவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கலாச்சார பேரவை நடத்தும் கிராமிய கலைவிழா உதிர் வரும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மாநகர சபை மண்டபத்தில் நடைபெறும்,

விழாவுக்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர்ஆர்.யோகநாதன் தலைமை தாங்குவார். பிரதம அதிதிபாக வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் என். கணேசானந்தம் கலந்துகொள்வார்.

புன்னகைச்சோலை சர்வோதய நிலையத்தினரின் 'கரகாட்டம்' சென சிசிலியா மகளிர் கல்லூரி மாணவிகளின் 'கிராமிய நடனம்' விபுலானந்தா இசை, நடனக்கல்லூரி மாணவவிகளின் நடனம் வின்சன்ட் மகளிர் கல்லூரி மாணவிகளின் 'நாட்டுக் கூத்து' என்பன மேற்படி கலைவிழாவில் இடம்பெறும்.

# 5 வருட காலமாக இயங்காத 16 தோலைபேசிகள்

கடந்த ஐந்து வருட காலமாக வவுனியா மாவட்ட தொலைபேசி பரிவர்த்தன நிலையத்தின் கீழ் ஐந்து தபால் நிலையங்களுக்கும் பதினொரு உபதபால் நிலையத்திற்குமிடையிலான தொலை தொடர்பு சேவை செயல்படவில்லை.

இதனால் மக்களுக்கே பாதிப்பாகும்.

மாங்குளம், ஒட்டிசுட்டான் நெடுங்கேணி' முள்ளியவளை செட்டிகுளம், ஆகிய தபால் நிலையங்களும் மாமடுவ, ஈரற்பெரியகுளம், நெளுக்குளம், ஓமந்தை, புளியங்குளம், நொச்சிமோட்டை, கனகராயன்குளம், சாஸ்திரி கூளாங்குளம், யோகபுரம், துணுக்காய், பாவற்குளம் ஆகிய உபதபால் நிலையங்களுக்கு முன்னர் தொலைபேசி இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அசம்பாவித காலம் ஏற்பட்டதினை அடுத்து பின்னர் தொலைபேசிகள் செயல்இழந்தன.

தற்போது சுமுக நிலை ஏற்பட்டுள்ளதினால் இதனை மீண்டும் செயல்படுத்தல் அவசியம் என மக்கள் கருதுகின்றனர். (11-கி)

மட்டு.விமான நிலைய விஸ்தரிப்பால்

# வீடு இழந்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு இதுவரை இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு 4 வருடங்களாகியும் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலைய விஸ்தரிப்பின் கீழ் 356 குடும்பங்களின் குடியிருப்புக் காணிகள் சுவிகரிக்கப்பட்டன.

இவற்றில் மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் 196 பேரின் காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு இவர்களுக்கு 64,48,250/— ரூபா வழங்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

மேலும் 160 பேரின் மதிப்பீட்டுத் தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அனுபிவைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (5—கி)

# பனை அபிவிருத்தி ஆய்வுநடாத்த சர்வதேச நிபுணர் யாழ் விஜயம்

சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதிஸ்தாபனத்தின் (இபாட்) பிரதிநிதி ஜெரமிவோல் யாழ் மாவட்டத்தில் பனைவள அபிவிருத்தி பற்றி ஆய்வு நடாத்தும் முகமாக இங்கு விஜயம் மேற் கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜெரமிவோல் தலைமையிலான குழுவொன்று கைதடியில் பலலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள பனை அபிவிருத்துச்சபையின் ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் கீழான பனைவள ஆய்வு நிலையத்தையும், சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பனியையும் ாார்வையிட்டது.

பசாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக்கிராம மக்கள் கம்பனியின் பனந்தும்பு உற்பத்தித் தொழிற்சாலையைப் பார்வையிட்டுப் பாராட்டிய ஜெரமிவோல் அங்கு தும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் முப்பது பெண்களின் வாழ்க்கைத் தரம், உற்பத்தி முயற்சிகள பற்றிக் கேட்டறிந்தார். அங்கு உற்பத்தி செய்யப்படும் பனங்கற்கண்டு, வெல்லம் ஆகியவற்றைச் சுவைத்துத் தனது மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

மக்கள் கம்பனி முகாமையாளர் திருவதி இராஜேஸ்வரி துரைச்சாமி மக்கள் கம்பனியின் செயற்பாடுகள் பற்றி அவசியம் விளக்கினார். (36)

ஆறுவார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு

# டாக்டர் நெல்சன் மண்டேலா ஐரோப்பாவில் சுற்றுப்பயணம்

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பிரதித் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா ஐரோப்பிய நாடுகளுக்கான 6 வார சுற்றுப் பயணத்தை ஆரம்பித்து வியாழக்கிழமை பிரான்ஸ் சென்றுள்ளார்,

பிரான்ஸ், மே. ஜேர்மனி, அயர்லாந்து, அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, கனடா, சுவிஸ் உட்பட 13நாடுகளுக்கு விஜயம் செய்யும் மண்டேலா அந்நாடுகளை; தென் ஆபிரிக்காவுக்கு எதிரான வர்த்தகத் தடையை தொடரும்படி கேட்கவுள்ளார்.

இவர் ஐரோப்பிய பாராளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளார். தென் ஆபிரிக்காவின் இனத்திற்கு எதிரான போராட்டத்திற்கு பிரான்ஸ் தெரிவித்த ஆதரவுக்கு மண்டேலா நன்றி தெரிவித்தார். தெ. ஆபிரிக்க ஜனாதிபதியும் இதுபோன்ற ஒரு ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. (9கி)

# பொப்பாடகர் ஜக்சன் நெஞ்சுவலியினால் அவதி

பொப்பாடகர் மைக்கல் ஜக்சன் நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 31வயதுடைய ஜனரஞ்சக கலைஞரான இவர் இதுவரை 100 மில்லியன்களுக்கு மேற்பட்ட பாடல் பதிவு நடாக்களை வெளியிட்டுள்ளார்

ஜக்சன் மருத்துவ பரிசோதனைக்கு எடுத்துச்சென்ற போது அவர் புதிய நெஞ்சு வலியினால் அவதியுறுகிறார் எள்று ஜக்சனின் அறிவிப்பாளர் பொப்ஜோன் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

ஜக்சனின் உடல் நிலை தற்சமயம் நிலையாக உள்ளது. அவர் சுகமாகஓய்வு எடுக்கிறார் என்றும் ஜோன் மேலும் தெரிவித்தார். திரைப் படநடிகை எலிசபெத் ரெயிலர் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலையான சன்ரமொனிக்காஸ் சென்.ஜோன்ஸ் ஆஸ்பத்திரியில் ஜக்சனும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜக்சனின் நண்பர் ஒருவரின் மரணமும் பேத்தியாரின் மரணமும் இவரை பெரிதும் பாதித்துள்ளன' எனவும் ஜோன்தெரிவித்தார்லட்சாதிபதியான ஜக்சர் ஒரு தாவர போசினியும், புகைத்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்கள் அற்றவருமாக காணப்படுகின்றார். (9 சி)

இருவல்லரசுகளின் நான்கு நாள்

# உச்சிமகாநாட்டுபலாபன்குறித்து சோவியத் ஜனாதிபதிதிருப்தி

இருவல்லரசு நாடுகளின் நான்கு நாள் உச்சிமகாநாடு பலாபலன்கள் குறித்து திருப்தி தெரிவித்து சோவியத் ஜனாதிப கொர்பச்சேவ் ஒரு செய்தியை அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ்புஷ் இற்கு அனுப்பியுள்ளார்.

இதேவேளை வெள்ளை மாளிகை முன்னாள் ஆலோசகர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் கடந்த வாரம் உச்சி மகாநாடு இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நடந்த மிக முக்கியமான மகாநாடுகளில் ஒன்று என்று கூறியுள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டரின் தேசியபாதுகாப்பு ஆலோசகரான டிறிசென்ஸ்சி நடந்து முடிந்த கொர்பி—புஷ் உச்சி மகாநாடு ஒரு முக்கிய திருப்பு முனையாக அமையும் எனக் கூறியுள்ளார்.

கெடுபிடியுத்த அபாயம் நீங்கி வருகிறது என்பதை இம் மாற்றங்கள் புலப்படுத்துகின்றன. (9 கி)

# கிளாலி ஐயனார் பொங்கல் உற்சவம்

கிளாலி அருள்மிகு ஐயனார் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் பதினைந்தாம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப-3கி)

# அமெ-பிலிப்பைன்ஸ் ஒப்பந்தம் 1991 இல் காலாவதியாகிறது

பிலிப்பயின்ஸ் நாடிட்ல்உள்ள அமெரிக்க இரனுவ தங்களின் எதிர்காலம் குறித்து ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தும் எண்ணம் தமது அரசிற்கில்லை என்றுபிலிப்பயின்சின் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்

1691 செப்டெம்பர் 16 இல் காலாவுதியாகும் குத்தகை ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் எண்ணம் பிமக்கில்லை என்று பிலிப்பயின்ஸ் அமெரிக்காவுக்கு தெரிவித்துள்ளது இரு நாடுகளும் இப்பிரச்சனை தொடர்பாக இம்மாத இறுதியில் அல்லது யூலைமாத ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளது. (9 கி)


# Computer Programming Courses

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| BASIC | 12-06-90 | TUE | 10.30 — 12.30 |
| | | THU | 10.30 — 12.30 |
| LOTUS 1,2,3 | 11-06-90 | MON. | 09.00 — 11.00 |
| | | WED | 09.00 — 11 00 |
| d BASE III × | 12-06-90 | TUE | 10.30 — 12.30 |
| | | THU | 10.30 — 12.30 |
| WORD PROCESSING | 14-06-90 | TUE | 08.30 — 10.30 |
| | | THU | 08.30 — 10.30 |
| Book keepers | | | |
| I A B Inter | 09-06-90 | SAT | 01.00 — 03.00 |
| | | SUN | 01.00 — 03.00 |
| I. A. B. Final | 16-06-90 | SAT | 03.00 — 05.00 |
| | | SUN | 03.00 — 05.00 |

C. I. M. A and A. A. T CLASSES HAVE JUST COMMENCED




SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Leaders in Computer Education)

16, 3rd Cross Street

West of O. L. R. church

JAFFNA

06245

# கிளிநொச்சியில் பாதிப்பு நிவாரணம்
# துரிதமாக வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகால வன்செயல்களால் சிறு காயமடைந்தவர்களுக்கு தற்காலிக பாதிப்பு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருந்த தற்காலிக காயமடைந்தவர்களுக்கு வெகுவிரைவில் நிவாரணம் வழங்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் முயற்சி எடுத்து நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேவேளை கச்சேரியில் பெரும் பாதிப்பு நிவாரணம் கோரி சமார் எழுபத்திஐந்து விண்ணப்ப படிவங்கள தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்காமல தேங்கிக்கிடக்கின்றன.

இது சம்பந்தமாக அவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தும் இதுவரை பரிசீலனைக்கு தகுந்த ஆவணங்கள் சமர்பிக்காததால் இந்த விண்ணப்பங்கள் பற்றியவேலைகள் செய்வதற்கு தடங்கலாகவுள்ளது,

எனவே உடனடியாகசம்பந்தப்பட்டவிண்ணப்பங்களுக்குரியவர்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரை சந்தித்து நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார், (35)

## மாணவருக்கு தனிப்பிரிவு தேவை

(அரியாலை)

ஆதார வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளிலும் மாணவர்கள் சிகிச்சை பெறுவதற்கென்று பிரத்தியேக தினங்கள் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது போல்,வெளி நோயாளர் பிரிவிலும் மாணவர்களைப் பார்வையிடுவதற்கென்று தனியானதோர் பிரிவினை ஆரம்பிப்பதன் மூலம், மாணவர்கள் தங்களது பாடசாலைக் கடமைகளைக் கஷ்டமின்றிச் செய்வதற்கு வாய்ப்பும், வசதிகளும் ஏற்படுமென்பதால் மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒரு தினத்தை ஒதுக்கீடு செய்து வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஆதார வைத்தியசாலையின் சுகாதார வைத்தியப் பணிப்பாளரைக் கோரும் கடிதமொன்றினை யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் அனுப்பி வைத்துள்ளது.(47-கி)

## திருமலையை உலுப்புகிறது நெருப்புக் காய்ச்சல்

திருகோணமலையில் நெருப்புக் காய்ச்சல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் கடந்த ஐந்து வருட காலத்தில் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏனைய வருடங்களை விட சென்ற வருடம் அதிகரித்துள்ளது.

1989ல் மொத்தம் 569 பேர் இங்கு நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தனர். அதிலும் திருமலை நகர்ப்பகுதியில் மாத்திரம் 326பேர் பீடிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி தகவல்கள் திருகோணமலையில் நடைபெற்ற சுகாதார அதிகாரிகள் கலந்து கொண்ட கருத்தரங்கில் வெளியிடப்பட்டன.(ஸ்ரீ)

## மேஜர் முரளி வெற்றிக்கேடய
## புதிர்ப்போட்டி 3-வது சுற்று; தெரிவான பாடசாலைகள்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடத்தும் மேஜர் முரளி ஞாபகார்த்த வெற்றிக் கேடயப் புதிர்ப் போட்டியின் 2-வது சுற்றில் யாழ்மத்திய கல்லூரியிலும், திருக்குடும்பக் கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலையிலும் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 1-வது சுற்றில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகள் மோதிக்கொண்டன.

2-வது சுற்றில் வெற்றி பெற்று 3-வது சுற்றிற்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு

மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், வல்வை மகளிர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலயம், பளை மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், பரியோவான் கல்லூரி, சன்மார்க்க மகாவித்தியாலயம்.

2-வது சுற்றில் வெற்றி பெற்ற பாடசாலைகளிற்கான 3-வது சுற்றுப்போட்டி, நடைபெறும் இடம், திகதி, நேரம் என்பவை பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2- வது சுற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலையினதும், மாணவனினதும் விபரங்கள் முறையே வல்வை மகளிர் கல்லூரி 48 புள்ளிகளையும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் சி.ரகுராம் பெற்ற புள்ளிகள் 18 ஆகவும் அமைந்திருந்தன. (ஸ்ரீ)

## யாழ். வங்கிக் கிளையில் உற்பத்தித்திறன் கொடுப்பனவு

இலங்கை வங்கி யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக் கிளையில் உற்பத்தித்திறன் கொடுப்பனவு கீழ் குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

கிராம சேவகர்பிரிவு, குடும்பங்களின் எண்ணிக்கை மாதகல் 238, பண்டத்தரிப்பு 70, மாசியப்பிட்டி 46, சங்கானை 10,சுதுமலை 93 (ஸ்ரீ)

## வெங்காயத்தில் கொள்ளை லாபம்

தமிழகத்தில் உள்ள சந்தைகளில் குறைந்தது 3 ரூபாவுக்குள் லங்கப்படும் வெங்காயம் இங்கு கிலோ 50 ரூபா வாக விற்கப்படுகின்றது.

கூ. மொ. வி. தாபனம் இந்தியாவிலிருந்தே வெங்காயத்தைஇறக்குமதிசெய்கின்றது.

கூ. மொ.வி. தாபனம் மேற்கொண்ட இறக்குமதியில் ஒரு பகுதியே விலைவீழ்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காய இறக்குமதிக்கு தனியாரிடமும் அனுமதி அளிக்கப்படுமானால் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (7.கி)

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை புள்ளிகள் இவ்வாரம்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் புள்ளிகள் இவ் வாரம் வெளியிடப்படவுள்ளது.

புள்ளிகள் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை களுக்கும் தனியார் மாணவர்களுக்கு அவர்களது சொந்த முகவரிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

பாடங்களுக்குக் கிடைத்த

## எழுத்துச் சீர் திருத்தத்திற் கமைய பாடநூல்கள் அச்சிடப்படும்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை பாடசாலைகளிலும் மாணவர்களிடையேயும் நடைமுறைப் படுத்த வேண்டும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பணித்துள்ளார்.

மாணவர்கள் தமிழ்எழுதும் போது 13 எழுத்துக்களையும் உபயோகிக்க, ஊக்குவிக்க வேண்டும் எனவும், பழைய எழுத்துக்களை எழுதுவோர் மூன்று ஆண்டுகளுக்குப் பாதிக்கப்படவுள்ளது எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசுப் பரீட்சை ஆகஸ்ட் 12 இல்

ஐந்தாம் வருட மாணவர்களுக்காக நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைநடைபெறும்.

வருடாந்தம்6,000 ரூபாவுக்கு குறைந்த வருமானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரமே புலமைப் பரிசிலாக வருடாந்தம் 2,000 ரூபா வழங்கப்படும்.

### வவுனியாவில்...

பண்ணியுள்ள இச்சம்பவம் பற்றித் தெரியவந்துள்ளதாவது.

விடுதலைப்புலிகளின் அனுமதி பெறாமல் மூன்று ட்ரக்குகள் மூன்று கனரக வாகனங்கள் இரண்டு பௌஸ்லோ டாங்கிகள் சகிதம் நூறு இராணுவ வீரர்கள் வவுனியாவிலிருந்து நேற்றுக்காலை முல்லைத்தீவை நோக்கிப் புறப்பட்ட சமயமே இம் மோதல் நிகழ்ந்தது.

**காவல் அரண் உடைத்தனர்**

தாண்டிக்குளத்தில் காவல் அரண்களில்நின்ற விடுதலைப் புலிகள் இந்த ஸ்ரீலங்கா இராணுவத் தொடர் வாகனங்களைத் தொடர்ந்து செல்ல விடாது தடுத்து நிறுத்தினர்.

அப்பொழுது காவல் அரண்களை உடைத்துக் கொண்டு இராணுவத்தினர் முன்னேற முயன்ற போது விடுதலைப்புலிகள் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

**புலிகளின் படையணிகள் விரைவு**

இவ்வேளை இருதரப்பினர் மத்தியிலும் சண்டை மூண்டது.

மறுகணமே இவ்விடத்தை நோக்கி விடுதலைப் புலிகளின் படை அணிகள் விரைந்து வந்து இராணுவத்தினரைச் சுற்றிவளைத்துக் கொண்டன.

இவ்விதம் சுற்றி வளைக்கப் பட்ட நிலையில் இராணுவம் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ப்பதை நிறுத்திக் கொண்டது.

இரு தரப்பினரும் அதே இடத்தில் நிலை கொண்டிருந்த சூழ் நிலையில் இப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடனும் இராணுவ தலைமைப் பீடத்துடனும் தொடர்பு கொண்டு பேசினர்.

**முறையீடு**

விடுதலைப்புலிகளின்அனுமதிபெறாமல்முகாமைவிட்டுஸ்ரீலங்காஇராணுவம்வெளியேறக் கூடாது என்று ஏற்கனவே இருதரப்பினருக்குமிடையே இணக்கம் குறித்து அரசாங்கத்திடமும் இராணுவதலைமைப்பீடத்திடமும் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள் இராணுவம் இந்த யுத்த நிறுத்தம் ஒழுங்கு விதியை முதல் முறையாக இப்போது மீறியுள்ளனர் என்று எடுத்துரைத்தனர்.

கடந்த ஒரு வருடகாலமாக யுத்த நிறுத்தம் பேணப்பட்டு வந்ததையும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நீதியமைச்சர் ஜனாப் ஹமீத்துடனும், பாதுகாப்புப் படைகளின் செயலாளர் ஜெனரல் கிறில் ரணதுங்க விடமே விடுதலைப்புலிகள் மேற்கண்ட நிலை பற்றித் தொடர்பு கொண்டு விபரித்து முறையிட்டனர்.

**பின்வாங்க உத்தரவு**

இதனைத் தொடர்ந்து இராணுவத்தை உடனடியாக பின்வாங்கிச் செல்லுமாறு மேலிடம் பணித்தது.

குறிப்பிட்ட இடத்தில் விடுதலை புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நிலவிய திகிலுடன் கூடிய பதற்ற நிலை பகல் பன்னிரண்டு மணியளவில் தணிந்தது.

மேலிடப் பணிப்பையடுத்து இராணுவம் வவுனியா முகாமுக்கு வாபஸ் பெற்றுச் சென்றது.

மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கோப்பரல் காமினி டி. சில்வா (வயது 28) என்று தெரிவிக்கப்பட்டது. அவரது சடலத்தை இராணுவ உயர் அதிகாரிகள் பொறுப்பேற்றுஎடுத்துச் சென்றனர்.

இச் சம்பவத்தையடுத்து வவுனியா நகர் சில மணிநேரம்அல்லோலகல்லோலப் பட்டது. பெருமபாலான கடைகள் பூட்டப்பட்டன. நகர் வெறிச்சோடியது ஆயினும் பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பியது. (11ஸ்ரீ)

### மின்தடை...

கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதே வேளை மின்தடையால் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட கியூவில் வாகனங்கள் காத்து நிற்பதையும் காணக்கூடியதாகவும் உள்ளது. (35)

## சிரமதானம்

மண்டைதீவு தெற்கு திடுதிடுக்கை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழகம் சிரமதானப் பணியை அண்மையில் மேற்கொண்டது.

இப்பணியில் பெருந்திரளான மாணவர்களும்,கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.இவர்கள் அனைவருக்கும் கழகச் செயலாளர் திரு.ந. விஜயசுந்தரம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.(ப-12)

### உழைத்த...

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், ''ஐக்கிய இலங்கையை ஏற்கும் நாம் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட வேண்டும் என்றே கருதுகிறோம்'' என்றும் சொன்னார் (ஸ்ரீ)

### புங்குடுதீவில்—

திடீர்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இக்குழுவின் திடீர்சோதனையின் போது அங்கிருந்து கசிப்பை ஊற்றிவிட்டு நிர்மூலமாக்கப்பட்டது.

கசிப்பு வடிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருந்த கேபிள்கள், பீப்பா, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும் இப்படியான சட்டவிரோத செயலில் இனி மேலும் ஈடுபடாமலிருக்க வேண்டும், எனவும் மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (20 ஸ்ரீ)

### இம்மாத...

ஒய்வூதியப் பிரிவினரின் முயற்சியினால் ஓய்வூதிய வவுச்சர்கள் முற்கூட்டியே கொழும்பிலிருந்து இங்கு தருவிக்கப்பட்டு ஓய்வூதியக்காரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இக்கொடுப்பனவுக்குரிய 30 மில்லியன் பணம் திறைசேரியினால் கடந்த முதலாம் திகதி கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கி தலைமையலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது எனினும் யாழ்.இலங்கை வங்கிக்கு அலுவலகத்திற்கு அக்காசோலையை அனுப்பி வைப்பதில் ஏற்பட்ட தாமதமே ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்பட்டதாமதத்திற்குக் காரணம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.(கி)

### விடு...

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அவர் ஆபத்தான நிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு விரயப்பட்டார்.

புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைச் சேர்ந்த நா. சிவபாக்கியம் வயது (45) என்பவரே இவ்வாறாக பலத்த காயங்களுக்குள்ளானவராவார், (20-ஸ்ரீ)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிரைவேட்] லிமிடெட், சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரஸில் 08.06.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது